தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தென்மேற்கு பருவமழை துவங்குகிறது?**

**சென்னை**: தென்மேற்கு பருவமழை அடுத்த, 48 மணி நேரத்தில் துவங்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பிருப்பதால், இந்த ஆண்டாவது, பருவமழையில் தமிழகம் செழிக்குமா என்பது, ஜூன் இறுதியில் தெரியும்.

ஆண்டு தோறும், ஜூன் முதல் செப்டம்பர் வரை, தென்மேற்கு பருவக்காற்றால் நாடு முழுவதும் மழை பொழிவை அளிக்கிறது. தொடர்ந்து, அக்டோபர் முதல் டிசம்பர் வரை, வடகிழக்கு பருவமழை பொழியும். தென்மேற்கு பருவமழையை பொறுத்தவரை, ஆண்டு மழை பொழிவில், 70 சதவீதத்திற்கு மேல் மழை கிடைக்கும். தமிழகத்தைப் பொறுத்தவரை, மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கில் உள்ளதால், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவை ஒட்டியுள்ள தமிழக பகுதிகளில் மழை கிடைக்கும்.

ஆனால், இந்த மழையே, ஆண்டு மொத்த மழையில் பெரும்பான்மையாக இருக்கும். தென்மேற்கு பருவமழையானது, இந்தாண்டு, 17ம் தேதி அதாவது, நாளை துவங்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வழக்கமாக, மே, 20ம் தேதி துவங்கும் நிலையில், மூன்று நாட்கள் முன்னதாக துவங்குகிறது. கடந்த ஆண்டும், இதே நாளில் துவங்கியதுடன், நாடு முழுவதுக்குமான மழை பொழிவு, ஜூலை, 15க்கு பதில், ஜூன், 15ம் தேதியே கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. தற்போது, அந்தமான் நிகோபார் பகுதிகளில் மழை அதிகரிக்கும்; தொடர்ந்து, ஜூன், 1ம் தேதி முதல் கேரளாவில் மழை பொழிவு துவங்கும். அப்போது, கேரளாவை ஒட்டிய தமிழக பகுதிகளான கோவை, குமரி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களும் மழை பொழிவை பெறும்.

தமிழகத்தை பொறுத்தவரை, இதற்கு முன், அக்னி நட்சத்திர காலமான மே மாதத்தில், அதிகபட்சமாக, 42 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகியுள்ளது. வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்று மேலடுக்கு சுழற்சி மற்றும்

வெப்பச் சலனம் காரணமாக, இன்னும் இரு தினங்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

## ரூ.79 லட்சத்தில் தேயிலை பூங்கா மலர் கண்காட்சி தினத்தில் திறப்பு?




**ஊட்டி**: ஊட்டி தொட்டபெட்டாவில், 79 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும், "தேயிலை பூங்கா'வை, மலர் கண்காட்சியன்று திறக்க, தோட்டக்கலை துறை திட்டமிட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா மலை சிகரத்துக்கு அருகே, மாவட்ட தோட்டக்கலை துறைக்கு சொந்தமான, 10 ஏக்கர் பரப்பளவு பண்ணையில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதி, 79 லட்சம் ரூபாயில், மாநிலத்தில் முதன் முறையாக, "தேயிலை பூங்கா' அமைக்கும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. நீலகிரியின் பொருளாதார முதுகெலும்பான, தேயிலை தொழில் குறித்த, முழுமையான விபரங்களை, பார்வையாளர்கள் அறிந்து கொள்ள வசதியாக, அருங்காட்சியகம் அமைகிறது. அதில், தேயிலை செடிகள் உருவான விதம், தேயிலை தூள் உற்பத்தி செய்யும் முறை, நீலகிரி தேயிலையின் குணம், தேநீர் அருந்துவதால் கிடைக்கும் மருத்துவ பயன்கள், தரமான தேநீர் தயாரிப்பு குறித்து அறிந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

பூங்காவின் உயரமான பகுதியில், தமிழக, கர்நாடக எல்லை மற்றும் பள்ளதாக்கு காட்சி முனைகளை கண்டு ரசிக்க, பார்வையாளர் மாடம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. பூங்காவின் ஒரு பகுதியில், குழந்தைகள் விளையாட இடம், உணவகம், கழிப்பறை, வாகன பார்க்கிங் வசதி என, சிறந்த சுற்றுலா தளமாக, இப்பகுதியை மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நீலகிரி மாவட்ட தோட்டக்கலை

துறை அதிகாரிகள் கூறுகையில், "தொட்டாபெட்டா மலை சிகரத்துக்கு வரும் சுற்றுலா பயணிகளை, தேயிலை பூங்காவுக்கு வரவழைக்கும் விதமாக, தேவையான அம்சங்களுடன், பூங்கா அமைக்கப்பட உள்ளது; காலநிலை ஒத்துழைத்தால், பணிகள் முடிக்கப்பட்டு, வரும், 23ம் தேதி, ஊட்டியில் துவங்கும் மலர் கண்காட்சியன்று, பூங்காவை திறக்க திட்டமிட்டுள்ளோம்' என்றனர்.

## கொடைக்கானலில் 25ம் தேதி மலர்க்கண்காட்சி

**கொடைக்கானல்**: கொடைக்கானலில், வரும், 25ம் தேதி, மலர் கண்காட்சி நடைபெறுகிறது. கொடைக்கானல் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சின்னராஜ் கூறியதாவது: கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில், 53வது மலர்க்கண்காட்சி துவக்க விழா, மே 25ல், நடக்கிறது. அரசுத்துறைகளின் செயல்விளக்க அரங்குகள் அமைக்கப்படுகின்றன. அதில், 60,000 மலர்களைக் கொண்டு, நான்கு பிரமாண்ட மலர் உருவங்கள் அமைக்கப்பட உள்ளன. வரும், 26ல், இக்கண்காட்சி நிறைவு பெறுகிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

## வறட்சியிலும் கிடைத்தது மல்லிகையால் வருமானம் : நீர்வடிப்பகுதி திட்டத்தால் பலன்




மதுரை : மதுரையில், நீர்வடிநிலப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில், வாய்க்கால் துார்வாரியதால், வறட்சி காலத்தில் மல்லிகைப்பூ சாகுபடியில் வருமானம் பார்த்துள்ளனர் பெண் விவசாயிகள். மாவட்ட விவசாயத்துறை சார்பில், கொட்டாம்பட்டி யூனியன், கொடுக்கம்பட்டியில், ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி

மேலாண்மை திட்டம் 3 செயல்பட்டு வருகிறது. திட்ட மேலாளர் ஜெயசிங்ஞானதுரை தலைமையில், துணை மேலாளர் எஸ்.கனகராஜ், உதவி இயக்குனர் வளர்மதி ஆகியோர், இத்திட்டத்தில் தடுப்பணை, கண்மாய், கால்வாய் தூர்வாருதல் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.இங்குள்ள சொக்கக்கிழவன்பட்டி பூவக்குழி வாய்க்கால், பல ஆண்டுகளாக புதர்மண்டிக் கிடந்தது. நீர்வடிப் பகுதி திட்டம் கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டதும், இவ்வாய்க்கால் தூர்வாரப்பட்டது. இதனால் சில நாட்களுக்கு முன்பு பெய்த லேசான மழைக்கும் பூவக்குழி வாய்க்கால் வழியாக மொக்கசாத்தான் கண்மாய்க்கு தண்ணீர் சென்றது. கண்மாயில் தண்ணீர் அதிகரித்ததுடன், அப்பகுதி நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. இப்பூவக்குழி வாய்க்காலை ஒட்டிய நிலத்தில் அப்பகுதி பெண் விவசாயிகள் அழகு, காசி ஆகியோர், ஆழ்துளை கிணறு அமைத்து, தலா 50 சென்டில் மல்லிகை சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களுக்கு விவசாயத்துறை அதிகாரிகள் பண்ணை உற்பத்திமுறையின் கீழ், 'நைட்ரோ பென்சீன்' என்னும், பூ ஊக்கி மருந்து வழங்கப்பட்டது.விவசாயி காசி கூறுகையில், "ஊக்க மருந்து பயன்படுத்தியதால் பூ விளைச்சல் அதிகரித்தது. தினமும் 12 முதல் 15 கிலோ வரை மல்லிகை கிடைக்கிறது. இதன்மூலம் தினமும் ரூ. 1200 முதல் 1500 வரை வருவாய் கிடைக்கிறது," என்றார்.திட்ட துணைமேலாளர் எஸ்.கனகராஜ் கூறுகையில், "விவசாயிகளுக்கு ரூ. 400 மதிப்புள்ள பூ ஊக்கி மருந்து, 80 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டது. வறட்சியான நேரத்தில் நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் கைகொடுத்துள்ளது" என்றார்.

## உள்நாட்டு மீன்வளத்தை பெருக்க நடவடிக்கை மீன்குஞ்சு விற்பனையில் இறங்கிய மீன்துறை

**மேட்டூர்**: ஏரி, குளங்கள் உள்பட நீர்நிலைகளில் மீன்வளர்த்து, உள்நாட்டு மீன்வளத்தை அதிகரிக்க மீன்வளத்துறை முடிவு செய்துள்ளது. இதற்காக மேட்டூர் மீன்விதை பண்ணை மூலம் மீன்குஞ்சு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இரு ஆண்டுகளாக பருவமழை தவறியதால், மாநிலம் முழுவதும் வறட்சி நிலவுகிறது. இதனால், தமிழகத்தில் மீன்கள் வளர்த்த ஏராளமான ஏரி, குளம் வறண்டு விட்டது. அதற்கேற்ப கட்லா, ரோகு, மிர்கால் உள்நாட்டு மீன்உற்பத்தியும் குறைந்துள்ளது. எனவே, உள்நாட்டு மீன்வளத்தை பெருக்க

மீன்வளத்துறை சார்பில் குஞ்சு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை அடிவாரம் மீன் விதைப்பண்ணை உள்ளது. பண்ணையில் கட்லா, ரோகு, மிர்கால் ரக மீன் குஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது.

மீன் விதைபண்ணையில் உற்பத்தி செய்து, ஆண்டுக்கு, 34 லட்சம் மீன்குஞ்சு மேட்டூர் அணையில் விடப்படுகிறது. இதுதவிர பிற பகுதியில் உள்ள அணை, ஏரி, குளங்களில் விடுவதற்காக, மேட்டூர் மீன்விதை பண்ணையில் இருந்து மீன்குஞ்சு அனுப்பி வைக்கப்படுகிறது. இதுதவிர தனிநபர்களுக்கு விற்பனை செய்வதற்காக மீன்குஞ்சு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாகி, ஐந்து நாள் உள்பட்ட, ஒரு லட்சம் கட்லா, மிர்கால், ரோகு மீன்குஞ்சு, 888 ரூபாய்க்கும், சாதா கெண்டை குஞ்சு, 432 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், ஐந்து முதல், 15 நாள் வரையிலான, 1,000 கட்லா, ரோகு குஞ்சுகள், 192 ரூபாய்க்கும், சாதா கெண்டை, 90 ரூபாய்க்கும், விரலி என அழைக்கப்படும், 30 நாள் ஆன, 1,000 கட்லா, மிர்கால் குஞ்சு, 252 ரூபாய்க்கும், சாதா கெண்டை குஞ்சு, 162 ரூபாயா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பெருவிரலி எனப்படும் உற்பத்தி செய்து, 45 நாள் ஆன, 1,000 கட்லா மீன்குஞ்சு, 720 ரூபாய்க்கும், ரோகு, மிர்கால், சேல்கெண்டை குஞ்சு, 420 ரூபாய்க்கும், புல்கெண்டை குஞ்சு, 600 ரூபாய்க்கும், சாதாகெண்டை, 390 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

ஏரி, குளம், தொட்டிகளில் மீன்கள் வளர்க்க விரும்புவோர், மேட்டூர் மீன்விதை பண்ணையில், அதற்கான கட்டணத்தை செலுத்தி, தேவையான மீன்குஞ்சு ரகங்களை பெற்று கொள்ளலாம் என, மீன்வளத்துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

## மக்காச்சோளத்துக்கு கூடுதல் விலை கிடைக்கும் கிடங்குகளில் சேமித்து வைக்க அறிவுறுத்தல்

**சேலம்**: மக்காச்சோளத்துக்கு, ஜூன் மாதத்தில் கூடுதல் விலை கிடைக்கும், என்று எதிர்பார்க்கப்படுவதால், கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு, விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில், கரீப் பருவத்தில், 72 சதவீதம், ரபி பருவத்தில், 28 சதவீதமும் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில், 2013ம் ஆண்டு மக்காச்சோள விலை ஏற்ற இறக்கத்துடன் இருந்தது. 2013 ஜனவரியில்,

குவிண்டால், 1,400 ரூபாய் வரை விற்ற மக்காச்சோளம் செப்டம்பரில், 1,600 ரூபாயாக உயர்ந்தது. ஆனால், டிசம்பரில் குவிண்டால் விலை, 1,300 ரூபாயாக குறைந்தது. கரீப் பருவத்தில், அதிகப்படியான உற்பத்தியால், குவிண்டாலுக்கு, 300 ரூபாய் வரை குறைந்தது. நடப்பு ஆண்டு, (2014) ஜனவரி முதல் மார்ச் வரை, தமிழகத்தில் மக்காச்சோளம் குவிண்டால், 1,250 முதல், 1,350 ரூபாய் வரை விற்றது. மார்ச் இறுதியில் உயரத் தொடங்கிய மக்காச்சோள விலை, தற்போது குவிண்டால், 1,420 ரூபாய்க்கு விற்கிறது. தமிழகத்தில் பல மாவட்டங்களில் மக்காச்சோள உற்பத்தி செய்யப்படுகிறது. சரியான மழை இல்லாத காரணத்தால், உற்பத்தி உயர வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

சேலம் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் பரணி கூறியதாவது:

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில், உள்ள வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தினர், உடுமலைப்பேட்டை சந்தையின் விலை நிலவரத்தை ஆய்வு செய்தனர். மேலும், வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தினர். ஆய்வு முடிவின்படி, மக்காச்சோள விலை ஏப்ரல், மே மாதம் வரை குவிண்டாலுக்கு, 1,450 முதல், 1,550 ரூபாய் வரை இருக்கும். அதன் பின், 1,600 ரூபாய்க்கும் அதிகமாகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறைந்த ஏற்றுமதி தேவையே இருந்த போதும், குறைந்த புது வரத்து மற்றும் தீவனத்துறையின் தேவை ஆகிய காரணங்களால், கூடுதல் விலை கிடைக்கும், என நம்பப்படுகிறது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை, கிடங்குகளில் சேமித்து வைத்து, ஜூன் மாதத்துக்கு பிறகு விற்பனை செய்து, அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

**காஞ்சிபுரம்** :மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, திடீரென மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் காலை முதலே வெயில் கடுமையாக சுட்டெரித்தது. இதனால், காற்றில் வெப்பத்தின் அளவு அதிகரித்து இருந்ததால், இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் மக்கள் அவதிப்பட்டனர். இந்த நிலையில், காஞ்சிபுரம் பகுதியில் இரவு 8:30 மணிக்கு, திடீரென சிறு தூறலுடன் மழை ஆரம்பித்தது. பின்னர், சிறிது நேரத்தில் பலமாக பெய்த மழை, 20 நிமிடங்கள்

நீடித்தது. மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மழை பெய்தது. இந்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்):

பகுதி மழை அளவு

உத்திரமேரூர் 2

செங்கல்பட்டு 1

காஞ்சிபுரம் 4

மதுராந்தகம் 2

## மானியத்துடன் கறவை கூடம் அமைக்க அரசு திட்டம்

**திருக்கழுக்குன்றம்** :கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க கறவை மாடுகளுக்கு, தண்ணீர் தொட்டியுடன் கூடிய கறவை கூடம் அமைத்துதர விவரங்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. கிராமப்பகுதிகள், பேரூர் பகுதிகளில் உள்ள மக்கள் பெரும்பாலானோர் கால்நடைகள் வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து, உற்பத்தி செய்யும் பாலினை, ஆவின் நிறுவனத்திற்கு வழங்குகின்றனர். ஊஎடு சங்கங்கள்காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம், உத்திரமேரூர், திருப்போரூர், தாம்பரம், செங்கல்பட்டு ஆகிய ஏழு பால் உற்பத்தியாளர் சரகங்கள் உள்ளன. இதன் கீழ் மாவட்டம் முழுவதும் 375 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.

இதில் 42 ஆயிரத்து 400 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் மூலம் உற்பத்தி செய்யும் பாலினை திருக்கழுக்குன்றம், பெரும்பாக்கம், உத்திரமேரூர், பெருநகர் ஆகிய பகுதிகளில் 3,000 லிட்டர் கொள்ளளவு உடைய மொத்த பால் குளிரூட்டும் நிலையத்திற்கும், 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உடைய சானுார், பாலுசெட்டி ஆகிய இடங்களில் உள்ள உச்ச மைய பால் குளிரூட்டி நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.

இதில் உறுப்பினர்களாக உள்ளவர்களின் கால்நடைகளுக்கு, 100 சதவீதம் மானியத்துடன் கறவை கூடம் அமைத்து கொடுக்கும் திட்டத்தை செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக மாவட்டத்தில் உள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிலும் உள்ள உறுப்பினர்களிடம், எத்தனை கறவை மாடுகள் உள்ளது என்ற விவரத்தை மூன்று மாடுகள் வைத்திருப்போர், ஆறு மாடுகள், ஒன்பது மாடுகள் வைத்திருப்பவர்கள் விவரங்கள் சேகரிக்கப்பட்டு கறவை கூடம் அமைப்பதற்கான இடவசதி போன்ற விவரங்களை சேகரிக்கும் பணியில் பால்வளத்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். க00 சதவீத மானியத்துடன்... இதுகுறித்து, பால்வளத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'கூட்டுறவு சங்கங்கள் மூலம் உறுப்பினர்களாக உள்ளவர்களிடம் எத்தனை மாடுகள் உள்ளன, கறவை கூடம் அமைப்பதற்கான இடவசதி உள்ளதா என்ற விவரமும், இவை தவிர கூட்டுறவு சங்களுக்கு என, தனியாக கறவை கூடம் அமைப்பதற்கும் இடவசதி உள்ளனவா என்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன' என்றார். மேலும், 'இப்பணிகள் முடிந்த பிறகு தகுதியுடைய நபர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் 100 சதவீதம் மானியத்துடன், கறவை கூடம் அமைத்துதர திட்டமிடப்பட்டு செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன' என்றார்.

## நாமக்கல் என்.சி.எம்.எஸ்.,ஸில் ரூ. 30 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**நாமக்கல்:** நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 30 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில், நேற்ற பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், 2,000 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சுரபி ரகம் அதிக பட்சமாக, 6,500, குறைந்த பட்சமாக, 5,600, ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 5, 400, குறைந்த பட்சமாக, 4, 800 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், 30 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை,

கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## கொப்பரை ரூ.106க்கு விற்பனை தொடர் மழையால் விலை உயர்வு

**கோபிசெட்டிபாளையம்**: ஈரோடு மாவட்டத்தில் பரவலான மழை, கொப்பரை உற்பத்தி குறைவு காரணமாக, கொப்பரை விலை உயர்ந்த வண்ணம் இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஒரு கி லோ கொப்பரை, 106 ரூ பாய்க்கு விற்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கோபி, பெருந்துறை, மொடக்குறிச்சி, அ வல்பூந்துறை உள்ளிட்ட பகுதிகளில், லட்சக்கணக்கான தென்னை மரங்கள் உள்ளன. கோபி சுற்று வட்டாரத்தில், சில இடங்களி ல் தென்னை மரங்களில் ப தநீர் இறக்கி, கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. மற்ற இடங்களில், கொப்பரை உற்பத்தி அதிகளவில் உள்ளது. உற்பத்தி செய்யப்படும் கொப்பரை கோபி, அவல்பூந்துறை உள்ளிட்ட இடங்களில் உள்ள, கொப்பரை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த, இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியால், ஏராளமான தென்னை மரங்கள் வேரோடு கருகி விட்டது. தென்னை மரங்கள் கருகியதால், கொப்பரை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. கோபி, பெருந்துறை, கொடுமுடி, காங்கேயம் ஆகிய பகுதியில், எண்ணெய் உற்பத்தி ஆலைகள், கொப்பரைகளை கொள்முதல் செய்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. எண்ணெய் ஆலைகளுக்கு, கொப்பரை தேவை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால், கொப்பரை விலை நாளுக்கு நாள், அதிகரித்த வண்ணம் உள்ளது.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கடந்த வாரம், ஒரு கிலோ, 105 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு வாரம், கிலோவுக்கு, ஒரு ரூபாய் அதிகரித்து, ஒரு கிலோ, 106.17 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

கொப்பரை விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பெருந்துறையில் கன மழை

**ஈரோடு**: பெருந்துறை, சென்னிமலையில், கன மழை கொட்டி தீர்த்தது. வங்க கடலில் ஏற்பட்ட புயல் சின்னத்தால், கடந்த வாரம், மூன்று நாட்கள், ஈரோடு மாவட்டத்தில் மழை பெய்தது. தற்போது, இரவு நேரங்களில் மழை வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலும், மழை வராமல் ஏமாற்றி வருகிறது. இந்நிலையில், பெருந்துறை, சென்னிமலை பகுதியில் மட்டும் கனமழை கொட்டி தீர்த்தது. சென்னிமலையில், 16 மி.மீ., பெருந்துறையில், 14 மி.மீ மழை பதிவானது.

## வைகாசி பிறந்தாச்சு பூ விலை உயர்ந்தாச்சு

**அவிநாசி** : கடந்த மாதம் சித்திரை என்பதால், திருமணம், கிரஹப்பிரவேசம் உள்ளிட்ட சுப நிகழ்வுகள் பெரும்பாலும் நடைபெறவில்லை. நேற்று வைகாசி மாதம் பிறந்துள்ளதால், இனி, சுப நிகழ்ச்சிகள் அதிகம் நடக்கும். அதனால், பூக்கள் விலை, இப்போதே உயரத் துவங்கி விட்டது. நேற்று முன்தினம் சித்ரா பவுர்ணமி விழா கொண்டாடப் பட்டதால், சம்பங்கி, மல்லி, முல்லை ஆகிய பூக்களின் விலை உச்சத்தில் இருந்தன. நேற்று சற்று குறைந்தது. இருப்பினும், இன்னும் ஓரிரு நாட்களில் மீண்டும் உயர வாய்ப்புள்ளது என்றே வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். பூ வியாபாரிகள் கூறியதாவது: சம்பங்கி ஒரு கிலோ ரூ.120, கோழிக்கொண்டை ஒரு கிலோ ரூ.110, மல்லிகை கால் கிலோ ரூ.60, முல்லைப்பூ கால் கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது. அடுத்த வாரத்தில் இன்னும் அதிகரிக்கும். இப்போது அடிக்கடி மழை பெய்வதால், அரளி பூக்கள் விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளதால், அதன் விலையும் உயர்ந்து விட்டது. ஒரு கிலோ ரூ.180க்கு விற்கப்படும் அரளி, மழை பெய்தால், மேலும் அதிகரிக்கும். தற்போது, சத்தியமங்கலம் சென்று கொள்முதல் செய்து வருகிறோம், என்றனர்.

## திராட்சை ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சி

**தேனி** : கம்பம் பகுதியில் விளையும் திராட்சையை ஏற்றுமதி செய்ய, தோட்டக்கலைத்துறை முயற்சி எடுத்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் சாகுபடியாகும் திசுவாழை, தற்போது பஹ்ரைன், சவுதிஅரேபியா, சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இதனால்

வாழை விவசாயிகள் நல்ல பலன் அடைந்து வருகின்றனர். கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி , ராயப்பன்பட்டி, உத்தமபாளையம், சின்னமனூர், ஒடைப்பட்டி, காமாட்சிபுரம் உட்பட பல்வேறு பகுதிகளில் தரம் வாய்ந்த திராட்சை சாகுபடி நடக்கிறது.

விற்பனை வாய்ப்பு இல்லாததால், விவசாயிகளுக்கு குறைந்த விலையே கிடைக்கிறது. இதனால் விளைச்சல் இருந்தாலும் விவசாயிகளுக்கு லாபம் இல்லாத நிலை நிலவுகிறது. எனவே, வாழை போல் திராட்சை விவசாயிகளுக்கும் ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்க, தோட்டக்கலைத்துறை முயற்சி எடுத்து வருகிறது.

## முதல் போகத்திற்கு ஜூன் 1ல் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை

**உத்தமபாளையம்** : கம்பம் பள்ளத்தாக்கில், முதல் போக நெல் விவசாயத்திற்கு, ஜூன் முதல் நாளிலேயே தண்ணீர் திறந்துவிட விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில நாட்களாக, கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் பெரியாறு நீர் பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், தற்போது அணை நீர்மட்டம் 114.80 அடியாக உயர்ந்துள்ளது. வினாடிக்கு 304 கன அடி நீர் வரத்து உள்ளது. இதில் 500 கன அடி குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக மழை சரிவர பெய்யாத காரணத்தை காட்டி, அணையில் இருந்து முதல் போகத்திற்கு ஜூலை மாதங்களில்தான் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. ஜூலையில் திறக்கப்படுவதால் முதல் போகத்திற்கான விளைச்சல் காலம் அக்டோபர் இறுதிவரையில் செல்கிறது. இதனை தொடர்ந்து இரண்டாம் போக காலமும் ஏப்ரல் இறுதிவரை சென்றுவிடுகிறது. எனவே தொடர்ந்து தண்ணீர் பிரச்னையையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இக்காரணங்களினால், தற்போது அணையில் போதுமான தண்ணீர் இருப்பதால், ஜூன் முதல் தேதியிலேயே முதல் போக பாசனத்திற்கு தண்ணீரை திறந்து விட கம்பம் பள்ளத்தாக்கு நீரினை பயன்படுத்துவோர் சங்க விவசாயிகள், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கான ஆலோசனை கூட்டம், சங்க தலைவர் தர்வேஷ் முகையதீன் தலைமையில் நடந்தது. செயலாளர் சகுபர்அலி முன்னிலை வகித்தார். உத்தமபாளையம் விவசாயிகள் சங்க தலைவர் அபுதாஹிர், கம்பம் தலைவர்

நாராயணன் உட்பட பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் "இரண்டு போகங்களில் நல்ல பயனும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் வழிவகுத்து காலத்தில் பயிர் செய்வதற்கு ஏற்ப, ஜூன் முதல் தேதியிலேயே தண்ணீரை திறக்க அரசு உத்தரவிட வேண்டும்,' என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசிற்கும், பொதுப்பணித்துறைக்கும் அனுப்பப்பட்டது.

## விவசாய கருவிகள் வாங்க ஆர்வம் ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை

**தேனி** : விவசாய கருவிகள் வாங்குவதற்கு தேவையான ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும், என மாவட்ட நிர்வாகங்கள் அரசுக்கு அறிக்கை அனுப்பி உள்ளன. உரிய நேரத்தில் பருவமழை துவங்கும், என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இந்நிலையில் விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளதால், விவசாயப் பணிகளுக்கு கருவிகளை அதிகளவில் பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாய பொறியியல் துறையிலும், விவசாய துறையிலும் களை வெட்டும் கருவி, மினிடிராக்டர்,ரோட்டோவேட்டர், விதை தூவும் கருவி உட்பட பல்வேறு கருவிகள் மானிய விலையில் வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு கருவிக்கும் ஏற்ப ரூ.30 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. சில கருவிகளுக்கு 50 சதவீதம் வரை மானியம் கிடைக்கிறது.

விவசாயிகள் கருவிகளை வாங்குவதில் ஆர்வம் குறைவாக உள்ளனர், என நினைத்து அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மிகக் குறைந்த அளவு இலக்கு நிர்ணயித்து கருவிகளை வாங்க மானியம் வழங்கியது. ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் கருவிகளை வாங்க ஆர்வம் காட்டி விவசாயத்துறையிலும், பொறியியல் துறையிலும் பதிவு செய்துள்ளனர். குறைந்த ஒதுக்கீட்டை வைத்து சமாளிக்க முடியாது என்பதால், கூடுதல் ஒதுக்கீடு வழங்க வேண்டும், என மாவட்ட நிர்வாகங்கள் அரசுக்கு அறிக்கை அளித்துள்ளன.

## ஆண்டிபட்டி பகுதியில் கோடை உழவு துவக்கம்

**ஆண்டிபட்டி**: ஆண்டிபட்டி பகுதியில், கோடை மழை கை கொடுத்ததால் விவசாயிகள் கோடை உழவு செய்து நிலங்களை பண்படுத்தி வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் பல நூறு ஏக்கர் மானாவாரி நிலங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழையை நம்பி, தங்கள் நிலங்களில் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் நடவு செய்வர். கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை சரியாக பெய்யாததால், மானாவாரி விவசாயம் முற்றிலும் பாதிப்படைந்தது.

வளர்ந்த பயிர்களுக்கு தொடர்ந்து மழை இல்லாததால், அறுவடைக்கு முன்பே தீவனத்திற்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. இதனால் விவசாய பணிகளை மேற்கொள்ளாமல், பலரும் முடங்கி கிடந்தனர். கடந்த சில நாட்களாக ஆண்டிபட்டி பகுதியில் கோடை மழை பெய்து வருகிறது. கோடை மழையால் குளங்கள், கண்மாய்களுக்கு நீர் வரத்து ஏற்படவில்லை. இருப்பினும் தற்போது கோடை உழவு செய்து நிலங்களை பண்படுத்தி வருகின்றனர். இன்னும் சில வாரங்களில், தென்மேற்கு பருவ மழை துவங்க வாய்ப்பு உள்ளது. பருவ மழை கை கொடுத்தால், இந்த ஆண்டு மானாவாரி விவசாயத்தை முன்கூட்டியே துவக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கன மழையால் கோடை உழவில் விவசாயிகள் தீவிரம் : பருவத்தில் விதைக்க பயன்படும் என நம்பிக்கை

**சாயல்குடி** : சாயல்குடி, கடலாடி, சிக்கல்பகுதியில் சில தினங்களுக்கு முன்பு பெய்த மழையால், விவசாயிகள் கோடை உழவில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வாரம் கனமழை பெய்ததில் கடலாடி, சாயல்குடி, சிக்கல் உள்ளிட்ட பல பகுதிகளில் வயல், கண்மாய்களில் தண்ணீர் நிரம்பியது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியோடு கோடை உழவை துவக்கி உள்ளனர்.சித்திரையில் வயல் நிரம்ப மழை பெய்ததால், விளைச்சல் பெருகும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் மகிழ்ச்சியோடு வயல்களை சுத்தம் செய்து, கோடை உழவில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.வாகைக்குளம் விவசாயி ஆறுமுகம்: கோடை உழவு செய்தால், இப்போதே களை வளர்ந்து கருகி விடும். மேலும், பருவகாலத்தில் உழவு செய்வதற்கு கன மழை பெய்யாமல் போனாலும், பருவத்தில் விதைப்பதற்கு இந்த உழவு பயன்படும். எத்தனை முறை விவசாயம் பொய்த்து போனாலும், விவசாயம் செய்யாமல் இருக்கமுடியவில்லை. இதை விட்டால் வேறு தொழிலும் இல்லை, என்றார். விவசாய சங்க செயலர் ராசு: மலட்டாறில் மழை நீர் வந்தது. ஆனால்,

அதை அருகில் உள்ள கண்மாய்களுக்கு தேக்குவதற்கு கால்வாய் இன்றி, வீணாக கடலில் மழைநீர் கலந்தது. சிறு அணை கட்டினாலும் 20 கிராமங்களின் விவசாயத்திற்கு மிகவும் பயன்பட்டிருக்கும். இனியாவது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**400 டன் ஏற்றுமதி அமெரிக்கர்கள் விரும்பும் அல்போன்சா மாம்பழம்**




**புதுடெல்லி** : இந்தியாவில் இருந்து அமெரிக்காவிற்கு இந்த ஆண்டு சுமார் 400 டன் மாம்பழம் ஏற்றுமதியாகும் என்றும் இது கடந்த ஆண்டை விட 42% அதிகம் என்றும் உணவு உற்பத்தி ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் (ஏபிஇடிஏ)தெரிவித்துள்ளது. இந்திய மாம்பழத்திற்கு அமெரிக்காவில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதே ஏற்றுமதி அதிகரிக்க காரணம் என்றும் ஏபிஇடிஏ சுட்டிகாட்டியுள்ளது. கடந்த 10 தினங்களாக மாம்பழம் ஏற்றுமதி செய்யும் பணி நடந்து வருகிறது. இதுவரை 50 டன் பழம் அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியாவின் மேற்கு பகுதியில் இருந்து அல்போன்சா மற்றும் கேசர் ரக மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு இருக்கிறது. அல்போன்சா மாம்பழத்தை

அமெரிக்காவில் உள்ளவர்கள் அதிக விரும்புவதால் அது அதிகளவில் ஏற்றுமதியாகிறது.

இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்து வரும் மாம்பழங்களும் ஏற்றுமதி செய்யப்படும். நடப்பு ஆண்டில் 60 ஆயிரம் டன் மாம்பழம் ஏற்றுமதியாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு இருப்பதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். அதே நேரத்தில் உள்நாட்டில் நடப்பு ஆண்டில் 16 லட்சம் டன் மாம்பழம் உற்பத்தியாகும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

**விவசாயிகள் எதிர்பார்ப்பை தகர்த்த ஈரோடு மஞ்சள் சந்தை**



**ஈரோடு:** ஆந்திர மாநிலம் நிஜமதாபாத் மஞ்சள் மார்க்கெட்டிற்கு மஞ்சள் மூட்டைகள் அதிகளவில் வந்ததன், எதிரொலியாக ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் அதன் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. மஞ்சள் வர்த்தகத்தில் அகில இந்திய அளவில் ஆந்திர மாநிலம் நிஜமதாபாத் மஞ்சள் சந்தை முதலிடத்திலுள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட் அடுத்த நிலையில் இருக்கிறது. இந்நிலையில், கடந்த 10 தினங்களுக்கு முன்பு வரை ஒரு குவிண்டால் விரலி மற்றும் கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக தலா ரூ.7,500 வரை விற்றது. இந்த விலை படிப்படியாக சரிந்து, தற்போது ரூ.4,400க்கு வந்துள்ளது. இந்த விலை வீழ்ச்சி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த சில நாட்களாக நிஜமதாபாத் சந்தைக்கு மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், இந்திய அளவிலும் மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இருப்பினும், இந்த ஆண்டு ஆந்திராவிலும், தமிழகத்திலும் மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்துள்ளதால் அதன் விலை அதிகரிக்கலாம்.

இதற்கிடையே, கடந்த வாரம் திடீரென பரவலாக மழை பெய்ததால் மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுவார்கள், என எதிர்பார்த்து தற்போது விற்பனைக்கு வந்த மஞ்சளுக்கு குறைந்த விலையையே வியாபாரிகள் நிர்ணயித்தனர். ஆனால் மழை நீடிக்காததால் மஞ்சள் பயிரிடுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எனவே இந்த ஆண்டும் அகில இந்திய அளவில் மஞ்சள் விளைச்சல் பாதிக்கும். மஞ்சள் விளைச்சல் குறையும் பட்சத்தில் தற்போது இருப்பு வைத்துள்ள மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைக்கும்' என்றனர். சரிவை சந்தித்த மஞ்சள் ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம், ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.7,095க்கும், குறைந்தபட்சம் ரூ.6,129க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6,719க்கும் குறைந்தபட்சம் ரூ.6,059க்கும் விற்றது. வெளி சந்தையில் விரலி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.7,170க்கும், குறைந்தபட்சம் ரூ.6,179க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6,777க்கும், குறைந்தபட்சம் ரூ.4,399க்கும் விலை போனது.

## ஒரு கோடி வண்ண மலர்களுடன் மே 25, 26ல் 53வது மலர் கண்காட்சி



**கொடைக்கானல்** : ஒரு கோடி வண்ண மலர்களுடன், கொடைக்கானலில் 53வது மலர் கண்காட்சி வரும் 25, 26ம் தேதிகளில் நடைபெற உள்ளது.மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலில் கோடை சீசனை முன்னிட்டு சுற்றுலா பயணி களை மகிழ்விக்கும் வகையில் சுற்றுலாத்துறை சார்பில் 10 நாள் கோடைவிழா நடைபெறும். இதில் முதல் இரு நாள் தோட்டக்கலை துறையினரால் மலர் கண்காட்சியும், தொடர்ந்து தினமும் பல்வேறு கலைநிகழ்ச்சி, விளையாட்டு போட்டிகள் நடைபெறும்.இந்த ஆண்டு கோடை சீசனை முன்னிட்டு வரும் 25ம்

தேதி கோடை விழா துவங்கி ஜூன் 3ல் நிறைவடைய உள்ளது. 10 நாள் நடைபெறும் கோடைவிழாவில் 25, 26ம் தேதிகளில் மலர் கண்காட்சி நடைபெற உள்ளது. இது 53வது மலர் கண்காட்சி ஆகும். பிரையண்ட் பூங்காவில் இந்த மலர் கண்காட்சி நடைபெறும்.

இதில் சால்வியா, ஆர்டிக்காலம், கேலன்டுல்லா, பேன்சி, மெரிகோல்டு, காஸ்மாக், டேலியா, பிங்க் ஆஸ்டர் உட்பட 88 வகையான 3 லட்சம் மலர்செடிகள் நடவு செய்யப்பட்டு, அதில் சுமார் 1 கோடி மலர்கள் பூத்து குலுங்குகின்றன. இந்த ஆண்டு மலர் கண்காட்சியை சிறப்பிக்கும் வகையில் சுமார் ஒரு லட்சம் மலர்களைக் கொண்டு மூன்று விதமான உருவச் சிற்பங்கள் செய்யப்பட உள்ளன.இதுகுறித்து தோட்டக்கலை துறை துணை இயக்குநர் சின்னராஜ் கூறுகையில், ‘‘பிரையண்ட் பூங்காவில் ஏற்கனவே 1 கோடி மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. பல்வேறு வகையான ஒரு லட்சம் மலர்களை கொண்டு 3 விதமான உருவச் சிற்பங்கள் செய்யப்பட உள்ளன. இது சுற்றுலா பயணிகளையும், குழந்தைகளையும் கவரும். மலர் கண்காட்சியை காண வரும் பயணிகளுக்கு குடிநீர், கழிவறை வசதி செய்யப்பட்டுள்ளது‘Õ என்றார்.

## <u>விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்</u>

**திருத்தணி**: திருத்தணி தோட்டக்கலைத் துறை சார்பில், விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. உயர் தொழில்நுட்ப திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காய்கறி சாகுபடி மற்றும் நாற்று உற்பத்தி பற்றி பயிற்சி அளித்தனர்.

முகாமுக்கு தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் நவநீதகண்ணன் தலைமை தாங்கினார். திருத்தணி உதவி இயக்குனர் ஜெயலட்சுமி வரவேற்றார். ஒன்றிய குழு தலைவர் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தார். இதில் திருத்தணி, ஆர்.கே.பேட்டை உள்பட பல பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் சதா சக்தி, எம்.தேவநாதன், விஜயலதா, விஜயகுமார் ஆகியோர் உயர் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். முடிவில் வேளாண் உதவி அலுவலர் விஜயகுமார் நன்றி கூறினார்.

## வேளாண் நிலையத்தில் தென்னங்கன்று விற்பனை

**நாமக்கல் :** நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப்படுகிறது.தற்போது பரவலாகப் பெய்து வரும் கோடை மழையில், தென்னை கன்றுகள் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள், தரமான நெட்டை, இளநீர் கன்றுகளைத் தேர்வு செய்து நடவு செய்யலாம். இதற்காக நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மேற்கு கடற்கரை நெட்டை, செஜகாட் இளநீர் ரக தென்னை கன்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. செஜகாட் ரக தென்னை கன்றுகள் இளநீருக்காக வளர்க்கப்படும் ரகமாகும்.இதில் இளநீரின் அளவு அதிகமாக இருக்கும். நுண்ணூட்டச் சத்துகள் அதிகளவில் உள்ளன. இந்த ரக தென்னை கன்றுகள் தற்போது மழை காலத்தில் நடவு செய்ய ஏற்றவையாகும். விருப்பமுள்ள விவசாயிகள், நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தென்னை கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04286 266345, 266650 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

## சமீபத்தில் பெய்த தொடர்மழையால் நாட்டுத்தக்காளி வரத்து வெகுவாய் குறைந்தது

**திண்டுக்கல்:** சமீபத்தில் பெய்த தொடர் மழையினால் தக்காளி வரத்து வெகுவாய் குறைந்து விட்டது. இதனால் ஏற்பட்ட பற்றாக்குறையை ஒட்டுரக தக்காளிகளே நிரப்பி வருகின்றன.

மாவட்டத்தில் அய்யலூர், வடமதுரை, திண்டுக்கல், அய்யம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தக்காளி அதிகளவில் பயிரிடப்படுகிறது. குறுகிய காலத்தில் பலன்தரும் என்பதால் சிறு, குறு விவசாயிகள் அதிகளவில் நட்டுள்ளனர். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கோடையினால் நீர் வெகுவாய் குறைந்ததால் தக்காளி விளைச்சலும் குறைந்தது. இந்நிலையில் கடந்த 10 தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. தொடர்ந்து பெய்த இந்த மழையினால் தக்காளிச் செடிகள் வெகுவாய் அழுகிவிட்டது. விளைந்த தக்காளியின் மேல் மழைநீர் பட்டு பாழாகிவருகிறது.

இதனால் தக்காளி வரத்து வெகுவாய் குறைந்துள்ளது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தக்காளி கிலோ ரூ.26க்கு விற்பனையானது. தற்போது திண்டுக்கல் உழவர் சந்தையில் இதன் வரத்து முற்றிலுமாக குறைந்தது.

இதனால் ஒட்டுத்தக்காளிகளே தற்போது சமையலுக்கு கைகொடுத்து வருகிறது. சமையலில் நாட்டு தக்காளியையே பலரும் விரும்பிப் பயன்படுத்துவர். சுவை, சத்து உள்ளிட்ட பல்வேறு விதங்களிலும் சிறந்திருக்கும். ஆனால் ஒட்டுத்தக்காளியைப் பொறுத்தளவில் இந்த சிறப்புகள் எதுவும் இன்றி அதிக நாட்கள் கெட்டுப்போகாமல் கெட்டியாக இருக்கும் தன்மையை பிரதானமாகக் கொண்டிருக்கும். இருப்பினும் ஒட்டுதக்காளி வரத்து இல்லாததால் வீரிய ரகங்களே தற்போது மார்க்கெட்டில் வியாபித்துள்ளன.

## <u>கோடை மழையால் நிரம்பிய பண்ணை குட்டைகள் விவசாயிகள் மகிழ்ச்சி</u>

**ராமநாதபுரம்:** கோடை மழையால் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகள் அனைத்தும் நிரம்பி உள்ளன. பண்ணை குட்டைகளில் உள்ள தண்ணீர் மிளகாய், பருத்தி சாகுபடி செய்ய உதவியாக இருக்கும் என வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மழையை நம்பியே ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயம் நடைபெறுகிறது. இதனால் மழை காலங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் நீரை தேக்கி வைத்து பயன் பெரும் வகையில் பண்ணை குட்டைகள் அமைக்கலாம் என கலெக்டர் நந்தகுமார் ஆலோசனை வழங்கினார்.

இதையடுத்து நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்டம் மூலம் பண்ணை குட்டைகள் அமைக்கும் திட்டம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. சொந்த விவசாய நிலம் உள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் பண்ணை குட்டைகள் அமைக்க ரூ.50 ஆயிரம் வரை நிதி வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் கடந்த 2013-14 ஆண்டு மாவட்டத்தில் 1,851 பண்ணை குட்டைகள் அமைக்க அரசு மூலம் அனுமதி பெறப்பட்டது. இதில் 1,644 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டன. தற்போது பெய்துள்ள கோடை மழையில் பெரும்பாலான பண்ணை குட்டைகளில் நீர் நிரம்பியுள்ளது.

பண்ணை குட்டைகளில் மீன் வளர்ச்சி துறை மூலம் மீன் குஞ்சுகள் வளர்ப்பதற்கு விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, துணை இயக்குனர் கமால்தீன் ஆகியோர் பண்ணை குட்டைகள் அமைந்துள்ள ஆர்எஸ்.மங்கலம் ஒன்றியம் பிச்சங்குறிச்சி மற்றும் நயினார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் நேரில் ஆய்வு செய்தனர்.

வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், "ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பண்ணை குட்டைகள் வரப்பிரசாதமாகும். கோடை மழை யினால் பெரும்பாலான பண்ணை குட்டைகள் நிரம்பியுள்ளன. மானவாரி நிலங்களில் மிளகாய், பருத்தி போன்ற பணப்பயிர்களை சாகுபடி செய்ய இந்த பண்ணை குட்டைகள் உதவியாக இருக்கும்.

மேலும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ நிலமற்ற விவசாய கூலி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகை யில் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு சுயஉதவி குழுவிற்கு ரூ.24 ஆயிரம் வரை வட்டியில் லா கடன் வழங்கப்படுகிறது.

வேளாண் பண்ணை உற்பத்தி திட்டத்தின் கீழ் பழமரக்கன்றுகள் நடுதல், அரசு புறம்போக்கு நிலத்தில் மரக்கன்றுகள் நடவு செய்து சமுதாயக் காடுகள் உருவாக்கும் பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

பண்ணை குட்டைகளில் சேகரிப்பட்டுள்ள தண்ணீர் மூலம் விவசாயிகள் நிலக்கடலை மற்றும் சிறுதானிய பயிர்வகைகள் சாகுபடி செய்யவுள்ளனர்" என்றார்.

## ஆரோக்கியத்திற்கேற்ற சத்துள்ள சிறுதானிய உணவுகள் வேளாண் அதிகாரி விளக்கம் நல்ல விலைக்கு சந்தைப்படுத்தலாம்...

**புதுக்கோட்டை:** உடலுக்கு நன்மை மற்றும் ஆரோக்கியத்திற்கேற்ற சிறுதானிய பயிர்கள் மற்றும் அதன் உணவு வகைகளில் என்ன, என்ன சத்துக்கள் உள்ளது என்பது குறித்து வேளாண் அதிகாரி விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து புதுக் கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வரகு: இதில் அடங்கியுள்ள அதிகளவு லெசித்தின் நரம்பு மண்டலத்திற்கும், சீரான செயல்பாட்டிற்கும் உதவுகின்றது. வரகில் வைட்டமின் பி குறிப்பாக நியாசின், போலிக் ஆசிட், தாது உப்புக்கள், கால்சியம், இரும்புச்சத்து அடங்கியுள்ளது. வரகில் க்ளுட்டன் என்ற புரதப் பொருள் இல்லாததால் க்ளுட்டன் ஒவ்வாமை உள்ளவர்களுக்கு இது சிறந்த உணவாகும்.

சீரான எடை குறைப்பிற்கும், மன அழுத்தத்திற்கும் நல்லதொரு உணவுவாக பயன்படுகிறது. வரகு உடல் பருமன் உள்ளவர்களுக்கு சிறந்த உணவு. வரகில் இட்லி, தோசை, ரொட்டி, புட்டு, இடியாப்பம், அடை, உப்புமா, பாயாசம், முறுக்கு, பக்கோடா போன்ற உணவு வகைகளைத் தயாரிக்கலாம்.

சாமை: அதிக ஊட்டச்சத்துக்கள் உள்ள 100 கிராம் சாமையில் புரதம் 7.7 கிராம், மாவுச்சத்து 67 கி., கொழுப்புச் சத்து 4.7 கி., இரும்புச்சத்து 9.3 மி.கி., நார்ச்சத்து 38.93 கி. உள்ளது. சாமையில் முக்கிய அமினோ அமிலங்களான மெத்தியோனின், சிஸ்டின், லைசின் ஆகியவை அதிகளவில் உள்ளன.

சாமையில் உள்ள அதிகளவு நார்ச்சத்துக்கள் மலச்சிக்கலைத் தடுப்பதிலும், கொழுப்பு அளவைக் கரைப்பதிலும் செரிமானத்தின்போது ரத்தத்தில் இருந்து குளுக்கோஸ் அளவை மெதுவாக வெளியிடுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. சாமையில் சாமை இட்லி, தோசை, இடியாப்பம், புட்டு, ரொட்டி, அல்வா, கேசரி, பாயாசம், முறுக்கு, ஓமப்பொடி போன்ற உணவு வகைகளைத் தயாரிக்கலாம்.

தினை: தேனும் தினை மாவும் தெவிட்டாத பண்டம் என்பது சங்க இலக்கிய காலத்திலிருந்து வழங்கி வரும் கருத்தாகும்.

இதில் 100 கிராம் தினையில் புரதச் சத்து 12.3 கி., கொழுப்பு 4.3 கி., நார்ச்சத்து 8.0 கி., மாவுச்சத்து 60 கிராமும் உள்ளது. புரதம் மிக்க தினையானது வளரும் குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளதாகும். தினையில் இட்லி, தோசை, இடியாப்பம், ரொட்டி, அடை, பாயாசம், அல்வா, முறுக்கு, ஓமப்பொடி, பக்கோடா போன்ற உணவு வகைகளைத் தயாரிக்கலாம்.

குதிரைவாலி: 100 கிராம் குதிரைவாலியில் மாவுச்சத்து 65.6 கி., புரதச்சத்து, 6.2 கி., நார்ச்சத்து 9.8 கி., இரும்புச்சத்து 5.0 கி.ஆகியவை உள்ளது.

நார்ச்சத்து மிகுதியாகக் காணப்படும். மலச்சிக்கலைத் தடுப்பதிலும், கொழுப்பு அளவைக் குறைப்பதிலும் உறுதுணையாக உள்ளது. சர்க்கரை நோய்க்கு பயன் உள்ளதாக உள்ளது. இதில் இட்லி, தோசை, பனியாரம், புட்டு, இனிப்புக் கொழுக்கட்டை, அதிரசம், முறுக்கு, வடை போன்ற உணவு வகைகளைத் தயாரிக்கலாம்.

கம்பு: முன்னோர்கள் காலத்திலிருந்தே அதிகளவு புழக்கத்தில் இருந்த உணவுப் பயிராகும். கோடைக்கு இதமான குளிர்ச்சியைத் தருவதில் கம்புக்கு நிகரில்லை மற்ற சிறுதானியங்களை விட கம்பு அதிகப் புரதச்சத்து மட்டுமில்லாது அமினோ அமிலங்களையும் அதிகம் கொண்டது.

100 கிராம் கம்பில் மாவுச்சத்து 67.5 கி., புரதச்சத்து 11.6 கி., கொழுப்புச்சத்து 5.0 கி., இரும்புச் சத்து 8.0 மி.கிராமும் உள்ளது. இதில் கம்பங்கூழ், சாதம், புட்டு, தோசை, இட்லி, இடியாப்பம், சேமியா, அடை, பாயாசம் போன்ற உணவு வகைகளைத் தயார் செய்யலாம்.

சோளம்: 100 கிராம் சோளத்தில் மாவுச்சத்து 72.6 கி., புரதச்சத்து 10.4 கி., இரும்புச் சத்து 4.1 கி., நார்ச்சத்து 12.69 கிராமும் உள்ளது. பி காம்ப்ளக்ஸ் வைட்டமின்கள் 50 முதல் 75 சதம் வரை உள்ளது.

இதை முழு தானியமாகவும், சோள அரிசியிலிருந்து பொங்கல், பனியாரம், ரொட்டி, நூடுல்ஸ், சேமியா போன்ற உணவு வகைகளாகவும் தயார் செய்யலாம்.

இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட சிறுதானிய உணவு வகைகளைத் தயார் செய்து இன்றைய குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை எற்படுத்த வேண்டியது நமது கடமையாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழகம், புதுச்சேரியில் வெப்ப சலனத்தால் இன்று ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**




**சென்னை,**

தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக நேற்றுமுன்தினம் திண்டுக்கல், கோவை, மதுரை, ஈரோடு உள்பட ஒருசில நகரங்களில் மழை பெய்தது. வெப்பசலனத்தால் தமிழ்நாட்டில் மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

அதன்படி, நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, சங்கராபுரம், மைலம், விருதுநகர் மாவட்டம் சிவகாசி, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை ஆகிய இடங்களில் தலா 3 செ.மீட்டர் மழை பெய்தது.

கோவில்பட்டி, திருவண்ணாமலை, வந்தவாசி, கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் தலா 2 செ.மீட்டர் மழை பதிவானது. புதுச்சேரி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ஈரோடு மாவட்டம் பெருந்துறை, தர்மபுரி மாவட்டம் பாப்பிரட்டிப்பட்டி, நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில், ராஜப்பாளையம்,

நீலகிரி மாவட்டம் நடுவட்டம், சேலம் மாவட்டம் ஏற்காடு உள்பட நகரங்களில் ஓரளவு மழை பெய்தது.

வெப்ப சலனம் தொடர்ந்து நீடிப்பதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்றும்(வெள்ளிக்கிழமை) மழையை எதிர்பார்க்கலாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

‘கத்திரி’ வெயில் கொடுமையினால் தவித்து வரும் மக்களுக்கு இந்த ‘திடீர்’ மழை சற்று ஆனந்ததை அளிக்கும் விதமாக அமைந்துள்ளது.

**முட்டை ஓடுகளை வீணாக்காமல் மதிப்புக்கூட்டிய பொருளாக மாற்றி உபயோகப்படுத்தலாம்**



**நாமக்கல்,**

முட்டை ஓடுகளை வீணாக்காமல் மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றி உபயோகப் படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப் பட்டு உள்ளது.

முட்டை ஓடு

முட்டைக்கோழி வளர்ப்பு இந்தியாவில் லாபகரமாக செய்யப்பட்டு வரும் முக்கிய மான தொழிலாகும். முட்டை உற்பத்தியில் நாமக்கல் மண்டலம் 2-ம் இடம் வகித்து வந்தாலும் ஏற்றுமதியில் முதலிடமும் வகித்து வருகிறது. முட்டை ஓடுகள் குப்பைகளாக வீசப் படுகின்றன. இவ்வாறு முட்டை ஓடுகளை வீணாக்கா மல்

அவற்றை மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றி உபயோகப் படுத்த வேண்டும் என நாமக் கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வேண்டு கோள் விடுக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக கோழியின அறிவியல் துறை இணை பேராசிரியர் கண்ணன் ஒரு செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:- முட்டை ஓடுகளை நன்றாக உடைத்து அதை செடியின் வேரில் மண் அணைத்து போட்டுவிட வேண்டும். இதனால் முட்டை ஓடுகள் செடிகளுக்கு கால்சியம், புரதம் மற்றும் இதர கனிம சத்துக்களை அளிக்கும் உரமாக மாறுகின்றன. உடைந்த முட்டை ஓடுகளை தக்காளி, கத்தரி, மிளகாய் போன்ற பயிர்களுக்கு உரமாக பயன்படுத்தலாம். இதனால் செடிகள் நன்கு வளர்வதுடன் அவற்றில் கால்சிய குறை பாட்டினால் ஏற்படும் நோய்களும் தடுக்கப்படும். உலர்ந்த முட்டை ஓடுகளை செடிகளின் வேர்ப்பாகத்தில் இடுவதால் நத்தை, இலை வெட்டுப்புழுக்கள் போன்ற வற்றை விரட்டி செடிகளை அவற்றின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம்.

<u>தரமான நாற்றுகள்</u>

முட்டை ஓடுகளை நாற்றுகள் உருவாக்க பயன் படுத்தலாம். காலியான முட்டை ஓட்டினுள் தேவை யான உரம் மண் போன்றவற்றை போட்டு பிறகு விதைகளை நட்டு வைப்பதால் தரமான நாற்றுகளை பெறலாம். முட்டை ஓட்டிலுள்ள கால்சியம், புரதம் மற்றும் இதர கனிமங்கள் நாற்றுகள் முளைக்க மற்றும் வளர்வதற்கு தேவையான சத்துக்களை அளிப்பதால் தரமான நாற்றுக்களை பெறலாம். மேலும் பறவைகளுக்கு உண வாகவும், தேநீர் குவளைகளில் ஏற்படும் கறைகளை போக்க வும், சிற்பங்கள் செதுக்கவும், வழவழப்பான சருமத்தை பெறவும், வெட்டுக்காயங்கள் மற்றும் புண்களை சரி செய்யவும் முட்டை ஓடுகள் பயன்படுகிறது. கழிவுநீர் குழாய் அடைப் புகளை சரிசெய்யவும் முட்டை ஓடுகளை பயன்படுத்தலாம். முட்டை ஓடுகளை நன்றாக உடைத்து அவற்றை கழிவுநீர் குழாய்க்குள் போட்டுவிட வேண்டும். கழிவுநீர் வெளியேறும்போது முட்டை ஓடுகள் தண்ணீருடன் சேர்ந்து வெளியேறி கழிவு நீர்க்குழாயில் உள்ள அடைப்புகளை நீக்கி விடும். எனவே முட்டை ஓடு களை வீணாக்காமல் அவற்றை மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றி உபயோகப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த மழைநீர் சேகரிப்பு அவசியம்**



ஊட்டியில் நடைபெற்ற பயிற்சி முகாமில் விவசாய கல்லூரி டீன் டாக்டர் ராஜேந்திரன் பேசிய காட்சி.

**ஊட்டி** ,

நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மழை நீர் சேக ரிப்பு மிகவும் அவசியம் என்று விவசாய கல்லூரி டீன் டாக்டர் ராஜேந்திரன் தெரிவித்து உள்ளார்.

10 நாள் பயிற்சி முகாம்

தமிழ்நாடு, அருணாச்சல பிரதேசம், மராட்டியம் ஆகிய மாநிலங்களை சேர்ந்த வனச்சரகர்களுக்கு 10 நாள் பயிற்சி முகாம் ஊட்டி மத்திய மண் மற்றும் நீர் ஆராய்ச்சி மையத்தில் நேற்று தொடங் கியது. இந்த முகாமிற்கு ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் கோலா தலைமை தாங்கினார்.

இதில் விவசாய கல்லூரி டீன் டாக்டர் ராஜேந் திரன் பேசியதாவது:- உலகில் உள்ள மொத்த மக்கள் தொகை யில் 18 சதவீதம் பேர் இந்தியா வில் வசிக்கிறார்கள். இதே போல் 15 சதவீத கால்நடை களும் உள்ளன. இந்தியாவில் 330 மில்லியன் ஹெக்டர் நிலப் பரப்பு உள்ளது. இதில் 55 சதவீத பரப்பளவிற்கு விவசா யம் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. இது சராசரியாக ஒரு விவசாயி 2.3 ஹெக்டர் பரப் பளவிற்கு விவசாயம் மேற் கொள்கிறார்.

மக்கள் தொகை உயர்வு

நாட்டில் தற்போது 125 கோடி பேர் வாழ்ந்து வருகின்ற னர். வரும் 2020-ம் ஆண்டில் மக்கள் தொகை 130 கோடியாக உயரும். அப்போது 2 வினா டிக்கு ஒரு குழந்தை பிறக்கும். 2028-ல் 145 கோடியாக உயர் ந்து இந்தியாவும், சீனா வும்

மக்கள் தொகையில் சம மாக இருக்கும். மக்கள் தொகைக்கு ஏற்றாற் போல் இந்தியாவில் விவசாய உற்பத்தி இல்லை.

தற்போது ஆண்டு தோறும் வெள்ளம், சூறாவளி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 5 ஆயிரத்து 334 டன் மண் அரிப்பு ஏற்படுகிறது. இதில் 29 சதவீத மண் கடலில் கலக்கிறது. 10 சதவீத மண் அணைகள், குளங்கள், தடுப்பணைகளில் கலக்கின்றன. மீதியுள்ள 61 சதவீத மண் தேவையற்ற நிலங் களில் படிகிறது.

<u>மழைநீர் சேகரிப்பு</u>

தற்போது தேவை ஏற்படும் நேரத்தில் பருவ மழை பெய் வது இல்லை. பருவம் தவறி மழை பெய்கிறது. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக் கப்படுகிறது. இந்த மழைநீரை சேகரித்து வைப்பதின் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த முடியும். இதற்காக அதிகளவு தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், பயன் படுத்தாத கிணறுகளில் மழை நீரை சேமிக்க கால்வாய்வெட்டு வது உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார்.

இதில் கோவை மத்திய வன ஆராய்ச்சி மைய அதிகாரி இளங்கோவன், மத்திய மண் ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி டாக்டர் மணி வண்னன் உள்பட ஏராளமா னோர் கலந்து கொண்ட னர்.

## <u>தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு சரக்குரெயிலில் 1000 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டது</u>



விருதுநகருக்கு அரவைக்கு கொண்டு செல்வதற்காக லாரியிலிருந்து நெல் மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றிய போது எடுத்த படம்.

**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு சரக்குரெயிலில் 1000 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என காவிரிடெல்டா மாவட்டங்கள் அழைக்கப்படுகின்றன. காவிரிடெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நடைபெறுவது வழக்கம். தற்போது சம்பா சாகுபடி அறுவடை பணி முடிவடைந்துள்ளது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

1000 டன் நெல் அரவைக்கு...

மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் பிள்ளையார்பட்டி, பருத்தியப்பர்கோவில், புனல்குளம், வீரநரசிங்கம்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நெல் மூட்டைகள் அரவைக்காக விருதுநகருக்கு அனுப்ப லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கு நின்ற சரக்கு ரெயிலில் நெல் மூட்டைகள் அனைத்தும் ஏற்றப்பட்டன.

மொத்தம் 21 வேகன்களில் 23 ஆயிரத்து 850 நெல் மூட்டைகள் அடங்கிய 1000 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன.

**<u>கடும் வறட்சி ஏற்பட்ட போதிலும் அறந்தாங்கி அருகே கொத்து, கொத்தாக காய்த்து குலுங்கும் ஈச்சம்பழங்கள்</u>**



**அறந்தாங்கி,**

கடும் வறட்சியால் தென்னை, தேக்கு உள்ளிட்ட பல மரங்கள் ஆயிரக்கணக்கில் பட்டுப் போய் உள்ள நிலையில் அறந்தாங்கி அருகே காராவயலில் நுீற்றுக் கணக்கான ஈச்சமரங்களில் ஈச் சம்பழம் கொத்து கொத்தாக காய்த்து குலுங்குகின்றன.

<u>ஈச்ச மரங்கள்</u>

தென்னை, பேரிச்சை, பனை, எண்ணைப் பனை(பாமலின்) மரங்களின் இனத்தைச் சேர்ந்தது ஈச்சம் மரம். கூடை செய்வதற்கு மட்டுமே பயன்படும் ஈச்ச மரத்தில் காய்க்கும் பழங்கள் சாப்பிடுவதற்கு சுவை யாகும். கோடைகாலத்தில் மட்டுமே காய்க்கும் ஈச்சம் பழங்கள் பேரிச்சை மற்றும் எண்ணைப் பனையின் பழத்தின் நிறத்தில் அளவில் சிறியதாக இருக்கும். பெரும் பாலும் ஆற்றுக்கரைகளில் மட்டுமே இருக்கும் ஈச்சமரங்கள், ஆற்றில் ஓடும் தண்ணீரைக் கொண்டு வளரும் தன்மை உடையது.

<u>கொத்து, கொத்தாக...</u>

இந்நிலையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வளர்ச்சியால் ஆற்றின் ஓரங் களில் இருந்த தென்னை, தேக்கு உள்ளிட்ட மரங்கள் ஆயிரக்கணக்கில் பட்டுப்போயுள்ள நிலையில், அறந்தாங்கியை அடுத்த காராவயல் பகுதியில் உள்ள

நூற்றுக்கணக்கான ஈச்சமரங் களில் ஈச்சம்பழங்கள் கொத்து கொத்தாக காய்த்து குலுங்குகின்றன. பசுமையான இலைக்கு மத்தியில் பொன்நிறத்தில் காய்த்து தொங்கும் ஈச்சமரங்களை அவ்வழியே வாகனங்களில் செல்வோர் நின்று பார்த்து, ரசித்து செல்கின்றனர்.

<u>மரத்திலேயே கிடக்கின்றன</u>

முன்பெல்லாம் கிராமங் களில் ஆடு, மாடு மேய்ப்போர், விடுமுறைக்காக கிராமத்திற்கு வரும் மாணவ, மாணவியர் கிராமங்களில் காய்த்து தொங்கும் ஈச்சம்பழங்களை பறித்து சாப்பிடுவது வழக்கம். தற்போது கிராமங்களில் ஆடு, மாடுகள் குறைந்ததாலும், கிராமங்களுக்கு விடுமுறைக்கு வரும் மாணவ– மாணவியரின் எண்ணிக்கை குறைந்து போய் உள்ளதாலும், பழங்களை பறிப்பதற்கு சிரமமான மரமாக ஈச்சமரம் இருப் பதாலும், மரங்களில் காய்த்து தொங்கும் ஈச்சம்பழங்களை யாரும் பறிக்காததால், அந்த பழங்கள் அப்படியே மரத்தி லேயே கிடக்கின்றன. சில சுற்றுலாத் தலங்களில் ஈச்சம்பழம் கிலோ கணக்கில் விற்பனை செய்யப்படும் நிலையில் அறந்தாங்கி அருகே சீண்டுவோரில்லாமல் மரங்களிலேயே ஈச்சம் பழங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**<u>திண்டுக்கல்லில் பிரசித்தி பெற்ற சிறுமலை பலாப்பழம் விற்பனை களைகட்டியது</u>**



திண்டுக்கல்லில் பிரசித்திபெற்ற சிறுமலை பலாப்பழம் விற்பனை களைகட்ட தொடங்கி உள்ளது.

## சிறுமலை பலாப்பழம்

முக்கனிகளில் இரண்டாம் இடத்தில் இருப்பது பலாப்பழம். தமிழகத்தில் ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு பழத்திற்கு பெயர் பெற்றது ஆகும்.

இதில் திண்டுக்கல், புதுக்கோட்டை, கன்னியாகுமரி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் பலாப்பழம் விளைகின்றன. எனினும், திண்டுக்கல்லில் விளையும் பலாப்பழத்திற்கு தனி சுவை உண்டு. திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலையில் அதிகமாக பலா மரங்கள் உள்ளன.

## சீசன் தொடக்கம்

மலைப்பகுதியாக இருப்பதால் இங்கு விளையும் பலாப்பழம் அதிக சுவை கொண்டதாக இருக்கிறது. அதிலும் சிறுமலை பலாப் பழத்திற்கென்று தனி மவுசு இருந்து வருகிறது. சிறுமலை பகுதியில் தற்போது பலாப்பழ சீசன் தொடங்கி இருக்கிறது.

அங்கு சிறுமலைபுதூர், தாழக்கடை, தவட்டுக்கிடை, தென்மலை, கருப்புகோவில், ஊரடி, பழையூர் உள்பட பகுதிகளில் பலாப் பழங்கள் விளைந்துள்ளன. தற்போது அவை பறிக்கப்பட்டு வாகனங்கள் மூலம் விற்பனைக்காக தினமும் திண்டுக்கல் நகருக்கு கொண்டு வரப்படுகின்றன.

## விற்பனை

திண்டுக்கல் சிறுமலை செட் பகுதியில் பலாப்பழங்கள் தினமும் விற்பனை செய்யப்படுகின்றன. இங்கு திண்டுக்கல் நகரம் மட்டுமின்றி வெளியூர்களை சேர்ந்த மக்களும் விரும்பி வாங்கி செல்கின்றனர். ஆனால், வறட்சியால் கடந்த ஆண்டு மழை பெய்யாததால், பலாப்பழ விளைச்சல் குறைந்துள்ளது.

இதனால் சிறுமலை பலாப்பழத்தின் விலையும் சிறிது உயர்ந்துள்ளது. சிறிய பழங்கள் ரூ.50 முதல் பெரிய அளவிலான பழங்கள் ரூ.250 வரை விற்பனை செய்யப்படுகின்றன. தள்ளுவண்டிகளில் சிறுமலை பலாப்பழத்தின் சுளை ஒன்று ரூ.2 முதல் ரூ.5 வரை விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

சிறுமலை பலாப்பழ சீசன் இன்னும் 3 மாதங்களுக்கு இருக்கும். பழங்கள் அதிக அளவில் வரும்போது விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## காவிரி நடுவர் மன்றத்துக்கு புதிய தலைவர்: தமிழக விவசாயிகள் வரவேற்பு

காவிரி நடுவர் மன்றத்தின் புதிய தலைவராக உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய நீதிபதி பி.எஸ்.சௌகான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை மத்திய அரசின் நீர்வளத் துறை வெளியிட்டுள்ளது. நீண்ட காலமாக காலியாக இருந்த தலைவர் பதவிக்கு இப்போது நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதை தமிழக விவசாயிகள் சங்கங்கள் வரவேற்றுள்ளன.

கடந்த 1990-ம் ஆண்டு அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம், 1991-ம் ஆண்டில் இடைக்கால உத்தரவையும் 2007-ம் ஆண்டு பிப்ரவரி 5-ம் தேதி இறுதி உத்தரவையும் பிறப்பித்தது. இந்த இறுதி உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்கள் நடுவர் மன்றத்தில் சீராய்வு மனுக்களை தாக்கல் செய்த அதே நேரத்தில், இறுதி உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலும் மேல் முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தன.

நடுவர் மன்றத்தில் சீராய்வு மனுக்களை தாக்கல் செய்து விட்டு, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனுக்களையும் தாக்கல் செய்தது போன்ற காரணங்களால் நடுவர் மன்றத்தில் விசாரணை முடங்கியது. இதற்கிடையே நடுவர் மன்றத்தின் தலைவராக இருந்த நீதிபதி என்.பி.சிங், தனக்கு உடல் நிலை சரியில்லை என காரணம் கூறி கடந்த 2012-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அதன் பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் தலைவர் பதவியில் யாரும் நியமிக்கப்படாததால், காவிரி நடுவர் மன்றத்தில் விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

இந்த சூழலில் உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய நீதிபதி பி.எஸ்.சௌகானை காவிரி நடுவர் மன்றத்தின் தலைவராக நியமனம் செய்து மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் மே 13-ம் தேதி அறிவிக்கை வெளியிட்டுள்ளது. நீதிபதி சௌகான் உச்ச நீதிமன்ற நீதிபதி பதவியிலிருந்து வரும் ஜூலை 1-ம் தேதி ஓய்வு பெறுகிறார். அதன் பிறகு காவிரி நடுவர் மன்றத் தலைவராக அவர் பதவியேற்பார்.

இந்த நியமனம் குறித்து தமிழக விவசாயிகள் மகிழ்ச்சியும், வரவேற்பும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ்.ரங்கநாதன் கூறியதாவது:

காவிரியில் தமிழக விவசாயிகளுக்கு உள்ள தண்ணீர் உரிமை தொடர்பாக பல்லாண்டு காலமாக சட்டப் போராட்டம் நடந்து வருகிறது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் 2007-ம் ஆண்டு காவிரி நடுவர் மன்றம் இறுதி உத்தரவைப் பிறப்பித்தது. எனினும் அதன் பிறகும் கூட தமிழக விவசாயிகளுக்கு நீதி கிடைக்கவில்லை. இறுதி உத்தரவுப் பிறப்பித்து சுமார் 6 ஆண்டுகளுக்குப் பிறகு 2013-ல்தான் அந்த உத்தரவு மத்திய அரசின் அரசிதழிலேயே வெளியிடப்பட்டது.

இதற்கிடையே நடுவர் மன்ற இறுதி உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்திலும், நடுவர் மன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணையின்றி கிடக்கின்றன.

இந்த சூழலில் நீண்ட காலமாக காலியாக இருந்த காவிரி நடுவர் மன்ற தலைவர் பதவிக்கு நீதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளதை தமிழக விவசாயிகள் சார்பில் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். விவசாயிகளின் பாதிப்புகளை உணர்ந்து நடுவர் மன்றத்தின் புதிய தலைவர், சீராய்வு மனுக்களை விரைவாக விசாரித்து உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

நடுவர் மன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளை புதிதாக அமையவுள்ள மத்திய அரசு காலதாமதமோ அல்லது பாரபட்சமோ இல்லாமல் விரைவாக அமல்படுத்திட வேண்டும் என்றார் ரங்கநாதன்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவரான கே.பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கூறியதாவது:

நடுவர் மன்றத்தில் நிலுவையில் உள்ள சீராய்வு மனுக்கள் பைசல் செய்யப்பட்டால்தான் மேல்முறையீட்டு மனுக்கள் மீது விசாரணை நடத்த முடியும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனல் நடுவர் மன்றத்தில் தலைவரே இல்லாததால் இதுநாள் வரை விசாரணை நடைபெறவில்லை.

இந்த சூழலில் தற்போது தலைவர் பதவி நிரப்பப்பட்டுள்ளது. காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு தனது ஆட்சிக் காலத்தின் கடைசி நேரத்தில் மிகவும் காலம் கடந்து இந்த நடவடிக்கையை எடுத்துள்ள போதிலும், தமிழக விவசாயிகள் சார்பில் வரவேற்கிறோம் என்றார்.